# "மாயுரம் வேதநாயகம் பிள்ளையின் தமிழ்த்தொண்டு"

***முனைவர் இரா. ஆன்றோ பியோ எழில்***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
போப் கல்லூரி, சாயர்புரம், தூத்துக்குடி

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 2**

**மாதம்: ஜூலை**

**வருடம்: 2023**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS2i1-July.6422

*முன்னுரை*

*"அடுப்புதும் பெண்களுக்குக் கல்வி எதற்கு?" என்ற நிலையை மாற்றி, தெய்வ அன்பும், நல்லறிவும், கற்புடைமை போன்ற நற்குணங்களும் நிரம்பப்பெற்று, பெண்கள், தங்கள் அறிவை வளரச் செய்யவும், குழந்தைகளைப் படிப்பிக்கவும் பெண்கல்வி அவசியம். கல்வி கற்காத பெண்கள் எவ்வளவோ அழகு உள்ளவர்களாய் இருந்தாலும், அவர்களுடைய அழகானது எட்டிமரம் பழுத்தது போலவும், பிணத்தை நகைகள் புட்டி அழகுபடுத்தியது போலவும் பயன் அற்றது. பெண்கள் படித்தவர்களாய் இருந்தால், ஔவை முதலானவர்களைப் போல் பல நூல்களைப் படைக்கவும், புதுமையான செயல்கள் பலவற்றைக் கண்டுபிடிக்கவும் இயலும். இந்த நாடு, ஐரோப்பிய நாட்டைப் போல விரைவில் நாகரீக வளர்ச்சியடையும். "எல்லையைக் காப்பவர் ஆண், இல்லத்தைக் காப்பவள் பெண்" என்ற உயரிய நோக்கில் மாயுரம் வேதநாயகம்பிள்ளை அவர்கள் ஆற்றிய தமிழ்த்தொண்டு தமிழ் கூறும் நல்லுலகில் பெண்மணியைப் போற்றிப் பெண் கல்விக்கு வித்திட்டது.*

## இயற்றிய நூல்கள்

மாயுரம் வேதநாயகம்பிள்ளை உரைநடை நூல்களையும், செய்யுள் நூல்களையும் இயற்றியுள்ளார். இவர் இயற்றிய ஒவ்வொரு நூலும் மிகச் சிறப்புடையதாய் அமைகின்றது.

வேதநாயகம்பிள்ளை இயற்றிய நூல்களுள் உரைநடை நூல்கள் ஐந்து, அவை பிரதாபமுதலியார் சரித்திரம், சுகுணசுந்தரி சரித்திரம், சித்தாந்த சங்கிரகம், பெண்கல்வி, பெண்மானம் ஆகியவை ஆகும். இவற்றுள் புதினம் இரண்டு.

உரைநடை நூல்கள் தவிர மற்றவை செய்யுள் நூல்கள் ஆகும். அவை சர்வசமய சமரசக் கீர்த்தனை, சத்திய வேதக்கீர்த்தனை, தேவமாதா அந்தாதி, திருவருள் அந்தாதி, தேவதோத்திரமாலை, திருவருள் மாலை, பெண்மதிமாலை, நீதிநூல், தனிப்பாடல் திரட்டு, தயாபரக் கண்ணி ஆகியவை ஆகும்.

சோபனப் பாடல்களும், பொம்மைக் கலியாணமும் கிடைக்கவில்லை. "புதினத்தின் தந்தை" எனப் போற்றப்படும் வேதநாயகம் பிள்ளையின் முதல் புதினம் பிரதாப முதலியார் சரித்திரம். இரண்டாம் புதினம் சுகுணசுந்தரி.

பிரதாப முதலியார் சரித்திரம் 350 பக்கங்களைக் கொண்டது. 1876-இல் வெளியிடப்பட்டது. நீதிநூலிலும், பெண்கல்வி நூலிலும், தாம் வெளியிட்டிருந்த அரிய கருத்துக்களைக் கதை மாந்தர்களின் பண்புகளாக்கிப் பிரதாப முதலியார் சரித்திரம் என்னும் பெயரில் வெளியிட்டார்.

வடசொற்களை அதிகமாக உபயோகப்படுத்தியுள்ளார். சிலப்பதிகாரத்தைப் போலவே பெண்ணின் பெருமையைப் பாடுவதுதான் இந்நூலின் மூலநோக்கம் என்று சாலை இளந்திரையன் குறிப்பிடுகிறார். இப்புதினம் பற்றி "என்னைக் கவர்ந்த புத்தகம்" என்று அறிஞர் அண்ணா, ராஜாஜி, டாக்டர் உ.வே.சாமிநாதய்யர், கி.ஆ.பெ.விசுவநாதம் போன்றவர்கள் குறிப்பிட்டுள்ளனர். பிரதாப முதலியார் சரித்திரம் தமிழிலேயே முதன்முதலாக எழுதப்பட்ட புதினம் ஆகும்.

பாரதிக்கு முன்னரே பெண்கல்வியை வலியுறுத்தியவர்

வேதநாயகம்பிள்ளை தம் இரு பெண்களான சவரிமுத்தம்மாள், இராசாத்தி அம்மாள் ஆகிய இருவருக்கென்றே மூன்று நாவல்களை (பெண்மதி மாலை, பெண் கல்வி, பெண்மானம்) இயற்றினார். பெண் வர்க்கம் உயர வேண்டியே இந்நாவல்களை எழுதினார்.

பெண்களின் நிலை ஏறத்தாழ பதினான்காம் நூற்றாண்டிற்குப் பின்னர், முகமதியர் ஆட்சி முதல் ஆங்கிலேயர் ஆட்சிவரை, அரசியலில் நிகழ்ந்த மாற்றங்களால் சீர்குலைந்து விட்டதை மிகுதியும் உணர்ந்தார் பாரதி. "பெண்ணின் பெருந்தக்க யாவுள?" என்று வள்ளுவர் பெண்ணின் பெருமையைப் பேசுவது போலவே, தாய்க்குலத்தின் பெருமையைத் தரணி அறியப் பாடுபட்ட பாரதி, "தாய்க்கு மேல் இங்கே யார் தெய்வமுண்டோ?" என்று மேம்படுத்திப் பேசினார். இவ்வாறு பெண்ணைப் பற்றிக் கூறும் இயல்புகளையும், பெண் கல்வியின் அவசியத்தையும் பாரதிக்கு முன்னரே வேதநாயகம்பிள்ளை வலியுறுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

பெண் கல்வியின் அவசியத்தைப் பாமரர்களுக்கும் புரியும் வகையில் பல்வேறு விவரங்களுடன் 1826-ஆம் ஆண்டிலேயே எழுதி உணரவைத்த முதல் புலவர் வேதநாயகம்பிள்ளை என்றால் மிகையாகாது.

இன்று நம்மிடையே மாயுரம் வேதநாயகம் இருப்பாராயின், பெண்கள் எல்லாத்துறையிலும் முன்னேறுகின்ற நிலையைப் பார்த்து, அவர் கண்ட கனவு நனவாவதாகக் கண்டு பெருமிதம் அடைவார் என்று சொன்னால் மிகையாகாது.

**துணைவியாரைப் பற்றிய அவல ஓவியம்**

இவர் பெண்மையைப் போற்றியதற்கு இன்னொரு காரணம் இவருடைய துணைவியார் எனலாம். இல்லறம் சிறக்கும் போதுதான் நல்லறம் ஆற்ற முடியும். வெளியுலகில் இவர் சிறப்பாகச் செயலாற்றியதற்கும், புகழ் பெற்றதற்கும் இவருடைய துணைவியாரின் அன்பும் செயலும் நல்ல காரணங்களாக அமைந்தன. கால்டுவெல், பேச்சுத்தமிழை மனைவி எலிசாவிடமிருந்து கற்றுக் கொண்டார். கணவனின் ஆராய்ச்சிகளுக்கு எலிசா பெருந்துணையாக இருந்தார். மாயுரம் வேதநாயகம்பிள்ளை துணைவியார்பால் கொண்ட அன்பானது, மற்ற மகளிர் பால் அருளாக மாற்றம் பெற்றது. இவர்தம் மனதுக்கிசைந்த துணைவி மாணிக்கத்தம்மையார் மறைந்தபோது பாடிய கையறு நிலைப்பாடல்கள் இவருடைய இல்லறச் சிறப்பையும், அன்பான வாழ்வையும் காட்டுவதாக உள்ளன.

**"ஆண்டபண்டம் எல்லாம் அழியா(து) இருக்க, நீ**
**புண்டஉடையிருக்கப்புணிருக்க-மாண்டனையே!**
**அன்னமே! உன்னை அடித்தேனோ? வைதேனோ?**
**சொன்னமே! ஏன் போனாய் சொல்?"**

என்பது அவருடைய துணைவியாரைப் பற்றிய அவல ஓவியம். அவர் தன் துணைவியாரோடு வாழ்ந்த அன்பு வாழ்க்கை

மற்றவர்களும் அன்போடு வாழவேண்டும் என்ற எண்ணத்தைத் தூண்டியிருக்கலாம். அதனால் பெண்ணுலகம் பெருமையுற வழிகாட்டும் முகமாகப் பல நூல்களை எழுதியிருக்கிறார் என்று கூறலாம்.

**பெண்மதிமாலை**

வேதநாயகருக்குச் சவரிமுத்தம்மாள், இராச்சி அம்மாள் என்ற இரு புதல்விகளும், ஞானப்பிரகாசம் என்ற ஒரு மைந்தனும் பிறந்தனர். இவர் மயிலாடுதுறையில் ஒரு பெண்கள் பாடசாலையை அமைத்தார். அதில் தன் பெண் மக்களைப் படிக்க வைத்தார். பாரதியார், தன் பெண் குழந்தைக்கு அறிவுறுத்தும் முகமாகப் பாப்பாப்பாட்டு பாடியது போல, இவரும் தன் குழந்தைகளுக்கு அறிவுரை கூறும் முகமாக 170 கண்ணிகளால் ஆன "பெண்மதி மாலை" பாடியிருக்கிறார். தன் புதல்விகளைப் போலவே மற்ற பெண்களும் உய்ய வேண்டும் என்னும் பேரருள் நோக்கோடு இவர் பெண்களைப் பற்றிப் பாடியிருக்கலாம்.

**பெண்மையின் சிறப்புப் பற்றிய உருவகம்**

தாய் தந்தையர் வளர்ப்பு முறையினால் தான் பெண்கள் உருவாக்கப்படுகிறார்கள் என்று வேதநாயகம் கருதுகிறார். "பெண் கல்வி" என்னும் நூலில் ஓர் ஐரோப்பிய மாதின் பண்பு நலன்களைக் கூறுமுகமாகப் பெண்மையின் சிறப்பைத் தெரிவிக்கிறார். அவள் புண்ணிய பொக்கிஷம்.

**பொறுமைக்கிருப்பிடம்**
**ஞானக் களஞ்சியம்**
**நற்குண பாத்திரம்**
**கற்பலங்காரி**
**கனவுபகாரி**
**அற்புத சுந்தரி**
**அவள் வாடாத புஷ்பம்**
**மங்காத தீபம்**
**ஆடாத மாமயில்**
**அலையாத மாங்குயில்**
**ஓடாத புள்ளிமான்**
**பறவாத பைங்கிளி**
**மாற்றில்லாத் தங்கம்**
**மாசில்லா மாணிக்கம்**
**கோதிலாக் கரும்பு**
**குறைவிலாச் சந்திரன்**

என்று அவளுடைய சிறப்புகளை மிக அழகான உருவகங்களால் கூறுகிறார்.

நல்ல பெண்மணியின் இலக்கணம்

"சுகுண சுந்தரி" என்னும் புதினத்தில், சுகுண சுந்தரி என்னும் கதைத் தலைவியின் மூலம், ஒரு பெண் எப்படியிருக்க வேண்டுமென்று விவரிக்கிறார். பிரதாப முதலியார் சரித்திரத்திலும் ஆசிரியர், ஞானம்மாள் என்னும் கதைத் தலைவியை அவளுடைய மாமியார் புகழும் முறையில் ஒரு சிறந்த பெண்ணுக்குரிய இலக்கணங்களைக் கூறுகிறார். சர்வ சமய சமரசக் கீர்த்தனையிலும் நல்ல பெண்மணியின் இலக்கணத்தைக் கூறுகிறார்.

**"நித்திரையிலுங் கணவன் தியானம்-என்றும்**
**நீங்காத பெரிய அபிமானம்**
**பத்தினிகளுக் கெல்லாம் குருஸ் தானம்- அவள்**
**பரபுருஷருக்கு மாதாசமானம்**
**உத்தம குணங்களே ஆபரணம்-ரத்ன**
**ஓலைமுதல் நகைகள் ஒருதிரணம்**
**பத்தாவைப் பிரிப்பது வேமரணம்-வரும்**
**பந்து ஜனங்கட் கெல்லாம் ஆதரணம்**
**குண அழகொன்று லஷாந்தரமே-கொல்லுங்**
**கொடுவிஷம் குணமில்லாள்- சுந்தரமே**
**உணர்வில்லாள் வீடுவனாந்திரமே- சுந்தரமே**
**உத்தமிக் கென்றுஞ் சுதந்திரமே"**

என்று கீர்த்தனையில் கூறுகிறார். தன் கணவனிடம் அன்பு நீங்காமல், தூக்கத்திலும், அவன் நினைவாகவே இருப்பவள் கற்புடைய மனைவியாவாள். "கற்புடை மகளிர் பிறர் நெஞ்சு புகார்" என்பது தமிழர் நெறியினை விளக்கும் அரிய கருத்தோவியம். உண்மையும் இயற்கையும் கொண்ட உளவியல் கருத்து மாகும். அக்கற்பு நெறியைக் காக்கும் உரமும், திறமும் உடையோர் பெண்களே"

அவளுடைய உயர்ந்த குணங்கள் தாம் அணிகலன்களே தவிர, வைர நகைகள் முதலியன அணிகலன்கள் ஆகா. முக அழகை விட, குண அழகு உடையவள் தான் பேரழகி என்பது வேதநாயகத்தின் கருத்தாக அமைகிறது.

**பெண்களைப் பற்றி வேதநாயகர் கையாண்ட பழமொழிகள்**

அட்ட தரித்திரம் ஆத்தாள் வீடு, அதிலும் தரித்திரம் மாமியார் வீடு.

அம்மா தெருளுவதற்கு முன் ஐயா உருளுவார்.

அரைக்காசுக்கு அழிந்த கற்பு, ஆயிரம் பொன் கொடுத்தாலும் வருமா?

அலியின் கையில் அரம்பை அகப்பட்டாற்போல்,

கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன், மரமானாலும் மணவாளன்.

கைம்பொண்டாட்டியே கழிபட்ட பிறப்பு

தன்னெஞ்சறியாத பொய்யில்லை: தாயறியாத சூலில்லை.

தாயும் பிள்ளையும் ஆனாலும் வாயும் வயிறும் வேறே!

நீலிக்குக் கண்ணீர் நிமையிலே.

பிள்ளை பெற்றவளைப் பார்த்து மலடி பெருமூச்சு விட்டதுபோல்.

மாமியார் மெச்சிய மருமகள் இல்லை.

மாமியார் உடைத்தால் மண்கலம், மருமகள் உடைத்தால் வெண்கலம்.

**முடிவுரை**

பல்லாற்றானும் தமிழ்த் தொண்டாற்றிய மாயுரம் வேதநாயகம் பிள்ளையின் நினைவுகளையும், உணர்வுகளையும் எண்ணிப் பார்க்கும் போது, தமிழின் மகத்துவம் புரிகிறது. தமிழில் இன்பம் கண்ட புதினத்தின் தந்தையாம் இவரின் புகழ் புவி இருக்கும் வரை நிலைத்து நிற்கும் என்பதில் ஐயமில்லை. "பெண்கள் கல்வி கற்க வேண்டும். அவர்கள் யோகம், ஞானம், அறிவு எல்லாவற்றிலும் ஆணுக்குச் சமமாய் நிற்க வேண்டும்" என்று கூறிய வள்ளலாரின் கருத்து இவருக்கும் பொருந்தும். இவரது அறிவுப் பசியின் விளைவுகள் தமிழருக்கு நிறைய வரவுகளைத் தந்துள்ளன. தமிழ் கற்ற அனைவரும் இவரை நினைந்து போற்றுவது தான் தலையாயக் கடமை என்று கூறுவது சாலச் சிறந்தது. மாயுரம் வேதநாயகம் பிள்ளையைத் தொடர்ந்து, அவர் வழியில் தமிழுக்குத் தொண்டு புரிவதே அனைத்துத் தமிழர்களின் தலையாயக் கடமையாகும். அவரை நினைத்திடுவோம். அவரது சிந்தனைகளைக், கருத்துக்களை, எண்ணங்களை ஏற்றிப் போற்றுவோம்.